மாதிரியான நிலைமைகள் வருகின்றபோது நிச்சயமாகக் கடுமையான நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்

(முற்பகல் 9 50)

திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆரம்பச் சுகாதார நிலையங்களில் ஏற்கனவே 3 டாக்டர்கள் இருக்கிறார்கள் என்றும் கட்டிடங்கள் உள்ள இடங்களில் புதிதாக சித்த வைத்தியம் பயின்ற டாக்டர் ஒருவரை 4 வதாக நியமிக்க முடிவு செய்திருக்கிறோம் என்றும், பதில் அளிக்கும்போது கூறினார்கள். ஆனால் ஏற்கனவே கட்டிடங்கள் இருக்கிற பல்வேறு ஆரம்ப சுகாதார நிலையங்களில், தமிழ்நாட்டில் அதுவும் குறிப்பாக வட ஆற்காடு மாவட்டத்தில், ஆங்கில மருத்துவ டாக்டர்களே இல்லை என்கிற நிலை இருப்பது அரசுக்குத் தெரியுமா? உத்தரவு இருக்கிறது ஆனால் அதை நிறைவேற்றுவதில்லை. அப்படித்தான் இந்த நியமனங்களிலும் இருக்குமா என்று அறிய விரும்புகிறேன்? (மணியடிக்கப்பெற்றது).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி சித்த வைத்தியர்கள் ஆங்கில மருத்துவத்தைப் பயன்படுத்துவது பற்றி. வடஆற்காடு மாவட்டத்தில் ஆங்கில மருத்துவ டாக்டர்கள் இல்லை என்று கேள்வி கேட்டால் எப்படி? மூலக் கேள்வியோடு ஒட்டிக் கேளுங்கள்.

திருப்பூர் அரசு மருத்துவமனை.

*வினா எண். 55 திரு. கு. ரமணி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) கோவை மாவட்டத் தலைமை மருத்துவமனையாக திருப்பூர் மருத்துவமனை அங்கீகரிக்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில் அந்த மருத்துவமனையில் உள்ள மொத்த படுக்கைகள் எவ்வளவு? மருத்துவர்கள் எத்தனை பேர்?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: (அ) ஆம்.

(ஆ) தற்போதுள்ள படுக்கைகள் .. 104
அனுமதிக்கப்பட்ட மருத்துவர் பணியிடங்கள் 24

திரு. ஆர். மணிமாறன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டத்தின் தலைமை மருத்துவமனையாக திருப்பூர் மருத்துவமனை ஆக வேண்டும் என்று அங்குள்ள மக்கள் நீண்ட நெடுங்காலமாக கேட்டு வந்தார்கள்

1981 ஆகஸ்ட் 25] [திரு. ஆர். மணிமாறன்]

இந்த அரசு அதைத் தந்ததற்காக, அந்த மக்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அத்தோடு, 104 படுக்கைகள் என்பதை 400 படுக்கைகளாக ஆக்க அரசு முன் வருமா? தலைமை மருத்துவமனை என்று மாறியிருந்தாலும் கூட, அது இன்னும் தலைமை மருத்துவமனையாக முழுமை பெறாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா? அதை மாற்ற அரசு முன் வருமா? தற்போதுள்ள கட்டிடங்கள் போதாததினால், புதிதாக கட்டிடங்கள் உருவாக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை அரசுக்கு , வைக்கவிருக்கிறோம். அதுகுறித்து அரசு நடவடிக்கை எடுக்கத் தயாராக இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூரைப் பொருத்தவரையில், இப்போதுதான் தலைமை மருத்துவமனையாக, அதுவும் பெரியார் மாவட்டம் பிரிந்ததற்குப் பிறகுதான், ஆக்கப்பட்டிருக்கிறது. அதற்கு முன் ஈரோட்டில் தலைமை மருத்துவமனை இருந்தது. திருப்பூர் தலைமை மருத்துவமனையாக மாற்றப்படுவதற்கு முன்பு 104 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாக தான் இருந்தது. இப்போது அதை 300 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாக உயர்த்த வேண்டும் என்று திட்டம் போட்டிருக்கிறோம். அரசாங்கத்தின் ஒவ்வொரு மாவட்டத் தலைமை மருத்துவ மனைக்கும் குறைந்த பட்சம் 300 படுக்கைகள் இருக்க வேண்டும் என்பது அரசின் திட்டம். அந்த அடிப்படையில் 300 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாக மாற்றி, அதற்குரிய புதிய கட்டிடங்கள் கட்ட 23.70 லட்சம் பணம் ஒதுக்கியிருக்கிறோம். டெண்டர்கள் எல்லாம் கேட்கப்பட்டு உடனடி நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டு வருகிறோம். அந்தக் கட்டிடங்களை ஜூன் 82 க்குள் கட்டி முடித்துவிடலாம் என்று கருதிக் கொண்டிருக்கிறோம்.

திரு. கோவைத்தம்பி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய கட்டிடங்கள் எழுப்பப்படும் என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். இன்று அங்கேயுள்ள அந்த மருத்துவ மனை அமைந்திருக்கும் இடம், திருப்பூரை விட்டுத் தள்ளி, சற்றுத் தொலைவில் இருக்கிறது. ஆகவே, வெளி நோயாளிகள் பயன் பெறும் வகையில், கட்டவிருக்கும் இப் புதிய கட்டிடங்களை திருப்பூர் நகரத்திற்கு அருகிலேயே கட்டுவதற்கு அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கோவைத்தம்பி அவர்கள் எழுப்பிய பிரச்னை உண்மையான பிரச்னை. இப்போது இருக்கக் கூடிய கட்டிடம் ஏறத்தாழ $1\frac{1}{2}$ மைல் தூரத்தில் நகரத்திலிருந்து இருக்கிறது. 23.70 லட்சம் ரூபாய் செலவில், அந்த மருத்துவ மனையை விரிவுபடுத்த ஏற்பாடு செய்துக் கொண்டிருக்கிறோம். அது படிப்படியாக விஸ்தரிக்கப்பட வேண்டும் என்ற திட்டம் இருக்கிறது. கிட்டத்தட்ட 12 மாதங் களுக்குள் விஸ்தரிக்கப்படும். விஸ்தரிக்கும்போது, மாண்புமிகு உறுப்பினர்களின் ஆலோசனை யோசிக்கப்படும்.

திரு. என். பழனிவேல் : மாண்புமிகு தலைவர் அவர்களே, திருப்பூர் மருத்துவமனையில் 104 படுக்கைகள் இருப்பதாகவும், அதற்கென 24 டாக்டர்கள் பணிபுரிகிறார்கள் என்றும் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நன்றி. ஆனால் அதைப்போலவே பல இடங்களில் 120, 130 படுக்கைகள் கொண்ட மருத்துவ மனைகளில் எல்லாம், 10, 12 டாக்டர்கள் மட்டுமே உள்ளார்கள் என்பது அரசுக்குத் தெரியுமா? அவர்கள் கூட லீவிலும், டெபுடேஷனிலும் சென்று விடுவதால், வெளியிலிருந்து வரக்கூடிய நோயாளிகளையும் மீதம் உள்ள உள்ளிருக்கும் நோயாளிகளையும் எஞ்சிய டாக்டர்களால் போதுமான அளவு கவனித்துக் கொள்ள முடிவதில்லை. ஆகவே, 10 நோயாளிகளுக்கு ஒரு டாக்டர் என்ற வகையில் டாக்டர்களை நியமித்து, முழுமையாக வைத்திய வசதிகளை மக்களுக்கு அளிக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்? உதாரணமாக என்னுடைய தொகுதியில் பழனி தலைமை மருத்துவ மனையை வந்து பார்த்தாலே தெரியும். அந்த வகையில் செயல்பட அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவர் அவர்களே, பழனி மருத்துவ மனைக்கு நான் சென்று பார்த்திருக்கிறேன். அது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். அப்போதிருந்த காலியிடங்களில் 4, 5 இடங்கள் தற்போது நிறைவு செய்யப்பெற்று விட்டன. தற்போது ஒன்றிரண்டு இடங்கள் தான் காலியாக இருக்கின்றன. அதைக்கூட விரைவில் நிரப்புவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். பொதுவாக எல்லா மருத்துவ மனைகளிலும் எவ்வளவு படுக்கைகள் இருக்கின்றனவோ அதற்கேற்ப டாக்டர்களை நியமிப்பதற்காக டிஸ்ட்ரிக்ட் மெடிக்கல் ஆபீஸர் களிடம் சொல்லி எங்கெங்கே குறைவாக இருக்கிறது என்று தெரிவிக்கச் சொல்லியிருக்கிறோம். பப்ளிக் சர்வீஸ் கமிஷன் மூலம் மருத்துவர்களை நியமித்திருக்கிறோம். எனவே இந்தப் பிரச்னை நல்ல வகையில் தீர்க்கப்பட்டிருக்கிறது. இப் பிரச்னை இனி எழாது.

பல்லவன் போக்குவரத்துக்கழக நிர்வாகப் பணியாளர்கள் கோரிக்கை.

வினா எண். 56 திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : திரு. செ. செம்மலை, திரு. எம். சின்னசாமி மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பல்லவன் போக்குவரத்துக்கழக நிர்வாக பணியாளர்கள் தங்களுடைய வேலை நேரத்தைக் குறைக்கவேண்டும் என்று கோரியுள்ளார்களா ?

(ஆ) ஆம் எனில், அக்கோரிக்கையின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?